29th March 1961]

SRI A. A. RASHEED : Sir, may I know whether any time limit has been fixed for the complete electrification of villages in our State?

THE HON. SRI V. RAMAIAH : This supplementary question does not arise from the main question.

Charitable institutions (mismanagement)

* 1169 *Q*.—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சரியாக நடைபெறாத தர்ம ஸ்தாபனங்கள் எவை எவை சர்க்கார் பராமரிப்பில் வந்தன ?

(இ) அதனுடைய நிர்வாகம் தற்போது எப்படி இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A statement is placed on the table of the House.

(*b*) The administration is satisfactory.

SRI N. R. THIAGARAJAN : இதி நிர்வாகம் ஏதேனும் ட்ரஸ்டிகள் வசம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? எக்ஸிக்யூடிவ் ஆபீசர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்தாபனத்தின அளவைப் பொறுத்து என்னென்ன என்று ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. விவரம் இப்பொழுது இல்லை.

College of Indigenous Medicine (establishment)

* 1170 *Q*.—SRI A. VEDARATHNAM : கன ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்திய மருத்துவக் கல்லூரி நிறுவுவது சம்பந்தமாக மேத்தா அறிக்கையின் சிபாரிசு என்ன ?

(இ) அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The Metha Committee's report has been received and it is being examined.

SRI S. NAGARAJA MONIGAR : நம்முடைய நாட்டுப் பொருளாதாரம் சீர்படுவதற்கும், செலவைக் குறைப்பதற்கும் நம்முடைய நாட்டு வைத்திய முறைக்குப் போவது சிறந்த சாதனமாக இருக்காதா ? ஏற்கனவே இருந்த கலாசாலையையும் மூடிவிட்டதனால் சீக்கிரம் இவ்விஷயத்தில் அபிவிருத்தி செய்வதற்கு கவனம் செலுத்தப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முன்பே சொன்னேன், "இதைப்பற்றி பரீட்சிக்கிறோம்" என்று.

SRI A. VEDARATHNAM : மேத்தா கமிட்டியின் முக்கியமான சிபாரிசு என்ன என்று அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The main recommendation of the Committee is the starting of a B.I.M. Course (a degree course which is to run for a period of five years inclusive of internship for one year) in the place of the G.C.I.M. Course.

---

* Printed as Appendix V on pages 412–416 infra.

அதோடு கூட Degree of Master of Indigenous Medicine, Faculty in Indigenous Medicine and Fellow of the College of Indigenous Medicine என்று இதெல்லாம் இருக்கிறது.

SRI A. VEDARATHNAM : இந்த ரிப்போர்ட்டின் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிவிக்க முடியுமா ?

The HON SRI M. A. MANICKAVELU : பிப்ரவரி மாதம் 21-ம் தேதி நாட்டுமுறை வைத்தியத்தில் ஈடுபட்டவர்களைக் கூப்பிட்டு ஒரு ஆலோசனை செய்தோம். அதிலே பெரும்பாலோர் "ஆல்மொஸ்ட் ஆல்" நாட்டுமுறை வைத்தியம் இருக்கவேண்டும், அதோடு அலபதி முறையும் சொல்லிக் கொடுக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். அந்தமாதிரி கொஞ்சம் வைத்தாலே எல்லோருக்கும் அதிலே புத்தி போய்விடுகிறது. ஆகவே இதுபற்றி என்ன பண்ணலாம் என்றுதான் யோசித்துக்கொண்டிருக்கிறது. இதுபற்றி கனம் அங்கத்தினரும் யோசனை ஏதாவது கூறினால் பரிசீலிக்கப்படும்.

Dysentery and typhoid (City)

* 1171 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken to prevent the spread of dysentery and typhoid in the City?

THE HON. SRI M. A. MANICKAVELU : No reports of abnormal cases due to dysentery have been received. As regards typhoid, the incidence of the disease which was prevailed in the year 1960 in a mild form showed a sharp increase in the last two months of the year and then declined. The Corporation is undertaking extra-chlorination of water, anti-fly measures, T.A.B. vaccinations and control of food supplies to prevent the spread of the disease.

SRI N. K. PALANISAMI : May I know why the incidence of this disease is increasing every year?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I cannot agree that it is increasing every year. This year, especially after the heavy rains, there was a tendency for the incidence of the disease to go up. But, as I said, it is declining. The Corporation of Madras have taken necessary steps for the prevention of this disease.

SRI N. R. THIAGARAJAN : சென்னை நகரில் பால் என்று கூறி ஏதோ ஒரு பவுடரை நீரில் கரைத்து வெள்ளையாகக் கொடுக்கிறார்கள். அதைச் சாப்பிட்டதன் பலனாக எனக்குக் கஷ்டம் ஏற்பட்டது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ பாண்டியராஜ் அவர்கள் அதைச் சாப்பிட்டதன் பலனாக உடல் நோவும், வயிற்றுக் கோளாறும் கண்டு ஊருக்குப் போய்விட்டார். எனவே இந்தப் பாலினால்தான் நோய் வருகிறதா ? பவுடரில் ஏதாவது கோளாறு இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பவுடரில் கோளாறு இருக்கிறதா அல்லது அதைக் கரைப்பதற்காக விடுகிற நீரில் கோளாறு இருக்கிறதா என்று தெரியவில்லை. உடனே அவ்விஷயத்தை கனம் அங்கத்தினர் சுகாதார அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தால் பரீட்சித்திருக்கலாம். இப்போது கூட வேறு யாராவது அந்தமாதிரி சாப்பிட்டு உடல் நலம் பாதிக்கப்பட்டது என்றால் பரீட்சிக்கத் தயார்.